## தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும் - அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க. - பா.ஜ.க. கள்ளக் கூட்டணியையும் கண்டித்து

# மாவட்டத் தலைநகரங்களில் தி.மு.க. இன்று ஆர்ப்பாட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவிப்பு!

**சென்னை, ஜன 7 -**

**தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும் அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க. - பா.ஜ.க. கள்ளக் கூட்டணியையும் கண்டித்து மாவட்டத் தலைநகரங்களில் தி.மு.க. இன்று (7.1.2025) காலை 10 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் அமைதியாக இருக்கும் ஆளுநர்கள், பா.ஜ.க அல்லாத மாநில அரசுகளில் தனி ராஜாங்கம் நடத்த முயல்கிறார்கள். ஆளுநர் மாளிகைகளை வைத்து மாநில நிர்வாகத்தை முடக்குவதை ஒரு வாடிக்கையாகவே வைத்திருக்கிறது மோடி அரசு. அதன் வெளிப்பாடுதான் இன்றைக்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடந்த நிகழ்வு.

ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் மாநில உரிமைகளை சிதைத்து, மாநில சுயாட்சியைப் பறிக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். 2023ம் ஆண்டு சட்டமன்றத்தில் ஆளுநர் ரவி உரையாற்றிய போது, மதச்சார்பின்மை, சுயமரியாதை, பெரியார், அம்பேத்கர், கலைஞர் ஆகிய சொற்களை உச்சரிக்கவில்லை. 'அரசு கொடுத்த உரையில் இருப்பதுதான் அவை குறிப்பில் இடம்பெறும்' என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அப்போதே நேருக்கு நேர் பதிலடி கொடுத்ததும், ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் அவையில் இருந்து வெளியேறினார்.

2024ம் ஆண்டு ஆளுநர் உரையின் தொடக்கத்தில், தமிழ்த்தாய் வாழ்த்து மட்டும் பாடப்படுகிறது, தேசிய கீதம் பாடப்படுவது இல்லை எனக்கூறி உரையை வாசிக்காமல் அமர்ந்தார் ஆளுநர் ரவி. முந்தைய ஆண்டில் கூறிய அதே துருப்பிடித்த ஆயுதத்தை இந்த ஆண்டும் மீண்டும் தூக்கி கொண்டு வந்து, அவையில் இருந்து உரையை வாசிக்காமல் வெளியேறியிருக்கிறார் ஆளுநர் ரவி.

**ஆளுநரின் விளக்கம் புல்லரிக்கிறது!**

தொடக்கத்தில் தேசிய கீதமும் பாடப்பட வேண்டும் என்ற தன்னுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் உரையை படிக்காமல் வெளியேறியதாக ஆளுநர் அளித்த விளக்கம் புல்லரிக்க வைக்கிறது. சில மாதங்கள் முன்பு பிரசார் பாரதியின் இந்தி மாத விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் பங்கேற்ற போது, தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் அவமதிக்கப்பட்டது. இப்போது தேசிய கீதம் முதலில் பாடவில்லை என சொல்லி மறைமுகமாக தமிழ்த்தாய் வாழ்த்தை ஆளுநர் எதிர்த்திருக்கிறார். அன்று தமிழ்த்தாய் வாழ்த்தில் திராவிட நல் திருநாடும் என்பதை விடுத்துவிட்டு பாடி நமது தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதித்தார்.

இன்று சட்டமன்றத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட்டதை சகித்துக் கொள்ளாமல் ஆளுநர் ரவி, தேசிய கீதம் என்ற போர்வையை போர்த்தி கொண்டு உடனடியாக சபையை விட்டு வெளியேறி, தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதித்திருக்கிறார். தேசிய கீதத்தை சட்டமன்றம் அவமதித்துவிட்டதாக தோற்றத்தை உருவாக்க முயல்கிறார். கடந்த ஆண்டே மழுங்கி போன இந்த திட்டத்தை மீண்டும் எழுப்ப ஆளுநருக்கு யோசனை கொடுத்தவர்கள் எவ்வளவு பெரிய புத்திசாலிகளா இருப்பார்கள்!

தேச பக்திக்கு ஒட்டுமொத்த குத்தகைதாரர் போல ஆளுநர் வேடம் கட்டுகிறார். ஆளுநர் உரையின் போது தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும் இறுதியில் தேசிய கீதமும் பாடப்பட்டு வருவதுதான் நடைமுறை. இதனை தகர்ந்து ஆளுநர் ஒருவரே நடந்து கொள்கிறார் என்றால், அது அரசியல் அல்லாமல் என்னவாக இருக்க முடியும்? முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தும் நிறைவில் தேசிய கீதமும் பாடப்படும் நடைமுறை ஆளுநர் ஆர்.என்ரவி அவர்களுக்கு தெரிவில்லை என்றால், இதற்கு முன்பு இருந்த பன்வாரிலால் புரோஹித் உள்ளிட்டோர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

**ஆளுநர்களை பேரவைக்கு அழைக்காத நிகழ்வுகள்!**

இப்படியான மோதல் போக்குகள் காரணமாகத்தான் பாஜக ஆளாத பல மாநிலங்களில் ஆளுநரை சட்டப்பேரவைக்கு அழைக்காத நிகழ்வுகள் நடைபெறுகின்றன. தெலங்கானாவில் தமிழிசை சௌந்தர்ராஜன் ஆளுநராக இருந்தபோது அப்போதைய முதலமைச்சர் சந்திரசேகர் ராவ் அவரை



அழைக்கவே இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் ஜனநாயக மாண்பை கடைபிடிக்கும் வகையில் ஆளுநரை அழைக்கிறோம். அரசியல் சாசன சட்டப்படி ஆளுநருக்கு தரவேண்டிய மரியாதையை திராவிட மாடல் அரசு அளித்து வருகிறது. ஆனால், ஆளுநர் தொடர்ந்து தமிழ்நாட்டையும் தமிழ்நாட்டு மக்களையும் சட்டப்பேரவை மாண்பையும் குலைக்கும் வகையில் நடந்து வருகிறார்.

**திராவிடச் சுவரைத் தாண்டி ஆளுநர் நுழைய முடியாது!**

மாநிலங்களின் தனித்த அடையாளங்களை அழித்து ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே பண்பாடு என்ற ஒற்றை ஆட்சி முறையை கொண்டுவந்து மாநில சுயாட்சியை அழிக்க நினைக்கிறது ஒன்றிய அரசு. அதற்கு ஆளுநரை கருவியாக பயன்படுத்த முயல்கிறார்கள். மாநில சுயாட்சியை உயிர் கொள்கையாக தூக்கிப் பிடிக்கும் தி.மு.க. அதை ஒருக்காலும் அனுமதிக்காது. மாநில சுயாட்சியை பறிக்க நினைக்கும் ஒன்றிய அரசின் முயற்சியை முதலமைச்சர் அவர்கள் அரணாக இருந்து தடுத்து நிறுத்துவார். திராவிட சுவரை தாண்டி ஆளுநரும் நுழைய முடியாது ஆரியமும் நுழைய விட மாட்டோம்.

**பா.ஜ.க.வின் முயற்சி பலிக்காது!**

மாநிலத்தின் பெருவாரியான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனநாயக முறையில் ஆட்சி செய்து வரும் அரசுக்கு என்னவெல்லாம் தொல்லை தர முடியுமோ அவற்றையெல்லாம் பாசிச பா.ஜ.க. அரசு கொடுத்து வருகிறது. நிதி பகிர்வில் பாரபட்சம் முதல் தமிழ்நாடு அடையாளங்களை அழிக்கத் துடிப்பது வரை முயன்று வரும் மோடி அரசு, இப்போது மக்களால் அமைக்கப்பட்ட சட்டமன்றத்தையும் ஆளுநர் மூலம் அவமதிக்க முயல்கிறது. பா.ஜ.க.வின் எந்த முயற்சியும் இங்கே பலிக்காது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை மீறி ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் தனித்து செயல்படுவது மக்களாட்சியை அவமதிக்கும் செயல். இந்திய அரசியல் சாசனத்திற்கே எதிரானதாகும். ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட நியமன பதவியில் இருக்கும் ஒருவர், தன்னை சர்வாதிகாரியாக நினைத்து கொண்டு மக்களையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும் அடக்கி ஆளலாம் என்ற அற்ப ஆசையோடு நடந்து வருகிறார் ஆளுநர் ரவி அவர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு உறுதுணையாக இருந்து மாநில வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டிய பொறுப்பு ஆளுநருக்கு உள்ளது. ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் உறவுப் பாலமாகத் திகழ வேண்டியவர், ஒன்றிய அரசின் ஏஜென்டாக இருந்து கொண்டு தமிழ்நாட்டு நலனை கெடுக்கும் விதமாக நடந்து வருகிறார் ஆளுநர் ரவி அவர்கள்.

**மாநிலங்களின் செயல்பாடுகளை முடக்க நினைப்பதா?**

பா.ஜ.க. ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பின் தங்களால் வெல்ல முடியாத மாநிலங்களில் எல்லாம் இப்படி ஆளுநர் மூலம் முட்டுக்கட்டை போட்டு நெருக்கடி கொடுத்து மாநில அரசுகளின் செயல்பாடுகளை முடக்கப்பார்க்கிறது. மேற்கு வங்கம், கேரளா, டெல்லி, பஞ்சாப் என எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் அத்தனை மாநிலங்களிலும் ஆளுநர்களை ஏவி விட்டு மாநில சுயாட்சியை பறித்து வருகிறது பா.ஜ.க. அரசு. மாநில சுயாட்சியை நசுக்கி ஒன்றிய அரசு மூலம் ஒற்றை ஆட்சியை நடத்தவே பா.ஜ.க. அரசு விரும்புகிறது. இதை ஒருக்காலும் தமிழ் நாட்டு மக்கள் ஏற்க மாட்டார்கள்.

குஜராத் முதல்வராக மோடி இருந்த போது குஜராத் இந்தூரில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் 2012 மார்ச் 4ம் தேதி ஆளுநர் பற்றிய கருத்து ஒன்றை தெரிவித்தார். “மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான உறவை மேம்படுத்துவது குறித்து ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட நீதிபதி மதன் மோகன் புஞ்சி கமிஷன் அறிக்கையின் படி, அரசியல்வாதிகளை ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது. ஆனால், மன்மோகன் சிங் அரசோ குஜராத்தில் அரசியல்வாதிகளை மட்டுமல்ல; மாற்றுக் கருத்துகளைக் கொண்ட அரசியல்வாதிகளையும் ஆளுநராக நியமிக்கிறது” என்றார் மோடி.

அந்த மோடிதான் பிரதமர் ஆன பிறகு பா.ஜ.கவைச் சேர்ந்த அரசியல்வாதிகளைத்தான் ஆளுநர்களாக நியமித்தார். தமிழக பா.ஜ.கவைச் சேர்ந்த தமிழிசை சௌந்தரராஜன், இல.கணேசன், சி.பி.ராதாகிருஷ்ணன் ஆகியோர் வெளி மாநிலங்களில் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். மகாராஷ்டிரா ஆளுநர் வித்யாசாகர் ராவ் தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக இருந்த போதுதான் பன்னீர்செல்வத்தையும் பழனிசாமியையும் ஒன்றாகக் கைகோர்த்து இணைத்து வைத்தார்.

**மோடி அன்று கூறியது என்ன?**

குஜராத் முதல்வர் மோடி இருந்த போது உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு, லோக் ஆயுக்தா விவகாரங்களில் ஆளுநர் கமலா பெனிவாலுடன் மல்லுக்கட்டினார். இதனால் கோபம் அடைந்த முதல்வர் மோடி மாநில உரிமையை நிலைநாட்ட அன்றைய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் அனுப்பினார். ‘கூட்டாட்சிக் கொள்கைகளை மீறும் கவர்னரை திரும்ப அழைக்க வேண்டும். ஒரு மாநிலத்தின் ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையின் படி செயல்பட வேண்டும்’ என்று கடிதத்தில் மோடி குறிப்பிட்டிருந்தார். அந்த மோடி பிரதமர் ஆன பிறகு பா.ஜ.கவை எதிர்க்கும் மாநில அரசுகளை ஆளுநர்கள் மூலம் இடையூறு செய்து வருகிறார்.

**அ.தி.மு.க. பா.ஜ.க. கள்ளக் கூட்டணி வித்தைகள்!**

எத்தனை இடையூறுகள் வந்தாலும் மாநில உரிமை, மாநில சுயாட்சியை விட்டு கொடுக்காத மண் தமிழ் மண். மாநில உரிமை, மாநில சுயாட்சி, மாநிலத்திற்கு வர வேண்டிய நிதி போன்ற விவகாரங்களை எல்லாம் முன்வைத்து ஒன்றிய அரசுடன் தி.மு.க. போராடிக் கொண்டிருக்கிறது.

ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டாக செயல்படும் ஆளுநரை காப்பாற்றவும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றும் வகையிலும் அ.தி.மு.க. - பா.ஜ.க. கள்ளக்கூட்டணி வித்தைகளை காட்டிக் கொண்டிருக்கிறது.

**பத்து தேர்தல்களில் தோற்ற பழனிசாமி!**

அ.தி.மு.க.வின் துரோகங்களை புரிந்து கொண்ட தமிழ்நாட்டு மக்கள் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகவை தொடர்ந்து பத்து தேர்தல்களில் தோற்கடித்த பிறகும் தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுக்கும் அரசியலை எட்டப்பன் பழனிசாமி செய்து வருகின்றார்.

தி.மு.க.வின் திராவிட மாடல் ஆட்சி என்றைக்குமே மாநில உரிமைகளையும் தமிழ்நாட்டு மக்களின் நலனையும் விட்டுக் கொடுக்காது.

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அதிமுக பாஜக கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் திமுக சார்பில் இன்று (07.01.2025) காலை 10 மணியளவில் “மாவட்டத் தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.

மாநில உரிமையில் அக்கறை உள்ள அனைவரும் ஒன்று சேர்வோம்.

தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதிக்காத, தமிழ்நாட்டின் உரிமைகளை மதிக்காத, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசை மதிக்காத ஆளுநர் ரவியை உடனடியாக ஜனாதிபதி திரும்ப பெற வேண்டும்.

“ஆளுநர் ரவியே தமிழ்நாட்டை விட்டு வெளியேறு” என நாடு தழுவிய போராட்டத்தை முன்னெடுப்போம்.

கள்ளக்கூட்டணி சேர்ந்து ஆளுநரைக் காப்பாற்றி, தமிழ்நாட்டைச் சிறுமைப்படுத்த முயலும் அ.தி.மு.க. - பா.ஜ.க.வை அம்பலப்படுத்துவோம்!

திராவிடச் சுவரை தாண்டி ஆளுநரும் நுழைய முடியாது

ஆரியமும் நுழையவிட மாட்டோம்!

இது மாநில உரிமைக்கான போர். இதில் வெற்றி பெறுவோம்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## மாநகரப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ள

# ‘சிங்காரச் சென்னை’ பயண அட்டைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிமுகம் செய்தார்!

*சென்னை,ஜன.7-*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில், பாரத ஸ்டேட் வங்கி (SBI) மூலம் சிங்கார சென்னை பயண அட்டையை பொது மக்கள் பயன்பாட்டிற்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பாரத ஸ்டேட் வங்கி (SBI) மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகம் இணைந்து வழங்கும் சிங்கார சென்னை பயண அட்டை வாயிலாக பயணிகள் பயணச்சீட்டு பெற்று பயணம் மேற்கொள்ள ஏதுவாக போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேற்று (06.01.2025) மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

சிங்கார சென்னை பயண அட்டையானது, பயணிகளுக்கு தடையற்ற மற்றும் பணமில்லா பரிவர்த்தனை பயண அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தொலைநோக்கு திட்டமாகும். இவ்வட்டையை பேருந்துகள், மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ அமைப்புகள் உள்ளிட்ட பல போக்குவரத்து பரிவர்த்தனைகளுக்கு பயன்படுத்தலாம். இந்த முயற்சியானது, தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்தை டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் நவீனமயமாக்குவதற்கான தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகளில் ஒன்றாகும்.

மாநகர் போக்குவரத்துக் கழக அனைத்துப் பேருந்துகளிலும், ஏற்கனவே சிங்கார சென்னை பயண அட்டையை பயன்படுத்தும் வகையில், ETM (Electronic Ticketing Machine) உபயோகத்தில் உள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக 50,000 அட்டைகள் SBI மூலம் கட்டணமின்றி வழங்கப்படும். இவ்வட்டைகள் கோயம்பேடு, பிராட்வே, சென்ட்ரல் ரயில் நிலையம், தாம்பரம், பூந்தமல்லி, திருவான்மியூர், செங்குன்றம், வேளச்சேரி, கிண்டி, ஆவடி, தியாகராயநகர், அம்பத்தூர் தொ.பே, அம்பத்தூர் ஓ.டி, அடையாறு, அய்யப்பன்தாங்கல், கிளாம்பாக்கம், வடபழனி, ஸ்ரீபெரும்புதூர், பெரம்பூர், சைதாப்பேட்டை ஆகிய பேருந்து நிலையங்களில் உள்ள மாநகர் போக்குவரத்துக் கழக பயணச்சீட்டு விற்பனை மையங்களின் வாயிலாக வழங்கப்படும். இவ்வாறு கட்டணமின்றி வழங்கப்படும் அட்டைகளை, ரீசார்ஜ் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம். ஆன்லைன் போர்ட்டல்கள், கைப்பேசி பயன்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மாநகர் போக்குவரத்துக் கழக பயணச்சீட்டு விற்பனை மையங்கள் போன்ற பல்வேறு வழிகளில் இந்த அட்டையை எளிதாக ரீசார்ஜ் செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் இந்த சிங்கார சென்னை பயண அட்டையை பேருந்துகளில் நடத்துநர்களிடமும் ரீசார்ஜ் செய்ய விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்நிகழ்வின் போது, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன், அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் ஆர்.மோகன், பாரத ஸ்டேட் வங்கி உயர் அலுவலர்கள், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், எல்லப்பட்டி ஊராட்சியில் கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 26.12.2024 அன்று திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலவதி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி மு.அய்யம்மாள் மற்றும் பலர் உள்ளனர்.

---

## இந்திய இசையை உலகெங்கும் கொண்டு சேர்த்த புயல்

# ஏ.ஆர்.ரஹ்மான் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜன. 7-**

**இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-**



மனதின் வெறுமைகளை எல்லாம் தன் இசையால் இட்டு நிரப்பும் ஈடில்லாக் கலைஞன், இந்திய இசையை உலகெங்கும் கொண்டு சேர்த்த புயல், அன்பு இளவல் ஏ.ஆர். ரஹ்மான் அவர்களுக்கு என் உளங்கனிந்த பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!

இசைபட வாழ்க!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



கழக துணை பொதுச்செயலாளர், கழக நாடாளுமன்றக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி பழைய பேட்டை சர்தார்புரம் அமராவதி நகர் பூங்காவில் தூய்மை பணியாளர்களுக்கு இலவச வேட்டி, சேலைகள் மற்றும் இனிப்பு ஆகியவற்றை வழங்கினார். நிகழ்வில் வட்டச் செயலாளர் செந்தில், பகுதி செயலாளர் பாபா முக்கையா, செல்வம், வார்டு பிரதிநிதிகள் நெல்லையப்பன், பண்டாரம், முகமதுஷா, ராமர்பாண்டியன், முருகன், சாகுல் ஹமீது, கணேசன், முத்துலட்சுமி, சொர்ண வேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.